1992 ஏப்ரல் 24]

(ஐ) மாநில உயர்கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டமுன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி யளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேர வையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.